Registered No. M. 4018

உ

வைத்திய சந்திரிகா.

திராவிட தேசிய ஆயுர்வேத மகாமண்டலத்தின்
சார்பில் நடைபெறும்

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 8 | February 1946 | No. 2

விஷய சூசிகை.	பக்கம்
மண்டலத்திற்கு பத்திரிகை வரவு—பத்திராதிபர்	1
எனது பிரார்த்தனை—பத்திராதிபர்	2—5
வேண்டுகோள் ஷை	5—7
லோகமும் அதன் உபயோகமும்	8—5
ஸர்வ வியாபகமான த்வக்ரோகம்	15
விரண சிகித்ஸையில் ஸ்வேதக்ரியா	16—10

சந்தா விகிதம்.	விளம்பர விகிதம்.
வருஷ சந்தா:—	மாதம் 1-க்கு பக்கம் 1க்கு ரூ. 8
உள்நாட்டுக்கு ரூ. 3	,, ,, ½-க்கு ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 4	,, ,, ¼-க்கு ரூ. 2

Editor Vaidya Vachaspathy—V. B. NATARAJA SASTRIGAL, Tennore Road, Trichinopoly.
Publisher – Pandit NARAYANA IYENGAR, Madura.

காபிரைட்] [விலை 0—4—0

Printed by Venkateswar Press, Madura, Paper Issue Card M. D. No. 112, 4-3-46, 150 copies.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

மண்டலத்திற்குப் பத்திரிகை வரவு.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் மதுரை பண்டிட் ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் ஸ்வாமிகள் அவர்களால் அடைந்து கொண்டிருக்கும் உபகாரம் மிகவும் அதிகம். அன்னார் சென்ற நவம்பர் மாஸத்தில் மதுரை நகரில் வைத்திய ஸம்மேளனத்தைச் சிறப்புற நடத்தியது யாவருமறிந்தது. தமிழ்நாட்டில் வைத்திய உலகிற்கு மிகவும் இன்றியமையாதது வைத்திய பத்திரிகை. நமது வைத்தியமண்டலம் ஏற்பட்டு பல வருஷங்கள் முடிந்தும் இதுகாறும் பத்திரிகை ஒன்று இதனால் நடத்தப்பட முடியாதது பெருங்குறையே. இக்குறையை இப்போது அகற்றிய உத்தமரும் மதுரை நாராயண அய்யங்கார் ஸ்வாமி அவர்களே. சென்ற எட்டு வருஷங்களாக மகாயுத்த கஷ்ட ஸமயத்திலும் கூட இடைவிடாது அவர்களால் வைத்திய உலகில் பிரசாரம் செய்யப்பட்டு வந்துள்ள வைத்திய சந்திரிகை என்ற மாதப்பத்திரிகையை தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு ஸம்பூர்ணமாய் தானமாய் கொடுத்துவிட்டார்கள். எட்டாவது வருஷத்தில் கன்யாதானம் செய்வது சாஸ்திரீயம்போல் சந்திரிகையை அதன் 8-வது ஆண்டில் ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் தானம் செய்துள்ளார் என்பது மட்டுமல்ல "கன்யாம் கனகஸம்பன்னாம்" என்ற மொழிக்கிணங்க சந்திரிகையுடன் ரூபாய் நூறும் சந்திரிகையின் அபிவிருத்திக்காக மண்டலத்திற்கு சந்திரிகையுடன் கூடவே தானம் செய்துள்ளார். வேதம்-லோகமறிந்த பண்டிதர் பெருமான். தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் ஸ்ரீ அய்யங்கார் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. கடமைக்கு அளவின்மையால் மிகவும் என்று சொன்னோம். மண்டலமானது சந்திரிகா ஸஹாயத்தினால் ஆயுர்வேதபிரசாராயணுய தீக்ஷை கொண்டு பாரததேசத்தில் இழந்த ஆரோக்கியஸ்வாராஜ்யத்தைத்திருப்ப சாசுவதமாய் நிலைநாட்டும் சக்தியை சீக்கிரமே பெற ஸ்ரீ தந்வந்தரி பகவானைப் பிரார்த்திக்கிறோம். மற்ற தானங்களைப்போல் அல்ல கன்யாதானம், தானத்திற்பிறகும் கன்னிகையின் யோகக்ஷேமாபிவிருத்தி விஷயங்களில் பிதாவிற்கு பூர்ண

ஸ்வாதந்திரியமுண்டு. இப்படியே வைத்திய சந்திரிகையின் ஸகல வித அபிவிருத்தித்துறைகளிலும், உத்தேச்ய பூர்த்தியிலும் ஸம்பூர்ண ஸஹாயம் நித்யமாய் சீர்செய்து கொண்டேயிருக்க ஸ்ரீ நாராயணய்யங்கார் நீடூழிவாழ ஸ்ரீ தந்வந்தரி அநுக்கிரஹம் செய்வாராக. பிறந்தகம் வாழப் பெண்வாழ. பத்திராதிபர்.

வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள்

வைத்திய சந்திரிகா—தலைமை ஆசிரியர், திருச்சி.

எனது பணிவான பிரார்த்தனை:—தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல நிர்வாஹிகள் வைத்திய சந்திரிகையின் தலைமை ஆசிரியர் பொறுப்பை என்னை வகிக்கும்படிக் கட்டளையிட்டுள்ளார்கள், இதற்கு எனக்கு பாண்டித்யம் என்ற விஷயத்தில் அர்ஹதை சிறிதுமில்லை என்பது வெளிச்சமானது, விடாமுயற்சி பலத்தால் சிலகார்யத்தைச்செய்து பார்க்கவும் அவகாசமில்லாதவன் நான். ஆயினும் சக்தியின்மை அறிந்தும், ஆயுர்வேதத்திற்கு இயன்ற அளவு ஊழியம் எவ்விதத்திலும் செய்யக்கடமைப்பட்டவன் என்ற ஒரு மனோபாவத்தினாலேயே மண்டல நிர்வாஹிகளுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டுள்ளேன். என்மேலுள்ள பேரன்பினால் எனக்குத் தலைமை ஆசிரியப்பதவியை அளித்துள்ள வைத்தியமண்டல நிர்வாஹிகளுக்கு ஹிருதயத்துடன் நன்றி பாராட்டுகிறேன்.

ஒரு பத்திரிகையானது நேர்மையாக நடக்கப்பல வித்வான்களுடைய உதவி இன்றியமையாதது என்பது யாவருமறிந்த உண்மை. எவ்வளவு பெரிய வித்வானாகிலும் சரி, ரஸமானக்கட்டுரைகள் எழுதும் பெரிய எழுத்தாளராயிருந்தாலும் சரி, ஒரு கையால் ஒரு பேனாவினால் நிரப்பப்படும் பத்திரிகைவாசகர்களுக்குச் சிறிதும் ரஸிக்காது. இது தத்துவாராய்ச்சி இன்றி சாதாரணப் பொது விஷயங்களை வெளியிடும் பத்திரிகைகளுக்கே இயல்பானது. வைத்திய சாஸ்திரப் பத்திரிகைக்கும் மற்ற பத்திரிகைகளுக்கும் வித்யாஸம் பலவிதம், வைத்தியப்பத்திரிகைகளில் முக்கியமாக சாஸ்திரீய

மான ஆராய்ச்சி விஷயங்களையும், சிகித்ஸா காரியங்களில் பரீக்ஷையிலும் அனுபவத்திலும் கண்டுபிடிக்கப்படும் தத்துவ விஷயங்களையும் பிரகாசம்செய்து பரிசீலனை செய்தல் அவசியம். இதுவே பத்திரிகையால் அடையக்கூடிய பிரதானமான பலன். நமது பத்திரிகையின் இந்த விதமான லக்ஷயங்களைப் பூர்த்திசெய்ய ஸகல வைத்தியர்களுடையவும் உதவி மிகவும் அவசியம். ஆதலால் வைத்தியபத்திரிகையில் பிரகாசம்செய்ய ஆயுர்வேதத்தின் எல்லா அங்கங்களிலும் சாஸ்திரீய ஆராய்ச்சி விஷயமான கட்டுரைகளை அப்போதைக்கப்போது எழுதி அனுப்பவும், தங்களுடைய சிகித்ஸைகளில் முக்கியமான ரோகங்களில் ஏற்படும் அனுபவ விசேஷங்களையும் (clinical reports) எழுதியனுப்பவும் ஒவ்வொரு வைத்திய வித்வானையும் பணிவுடன் பிரார்த்தனை செய்கிறேன்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் ஸ்தாபக ஸமிதி.

14-வது ஆண்டின் முதலாவது கூட்டம் 16—2—1946 மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. மண்டலத்தலைவர் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி தலைமை வகித்தார் வெளியூர்களிலிருந்து 12 அங்கத்தினர்கள் கடிதம்மூலம் அபிப்பிராயம் கொடுத்திருந்தனர், பல இடங்களிலிருந்து நேரில் 19 அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர், 30—1—46-ல் விடுத்த அறிக்கையில் கண்ட விஷயங்களை ஆலோசித்துத்தீர்மானம் செய்யப்பட்டதின் சுருக்கமும் நடவடிக்கையும் வருமாறு—

1. ஸ்ரீரங்கத்தில் ஆயுர்வேத தர்மவைத்தியசாலை ஸ்தாபகரும் சிறந்த ஆயுர்வேதாபிமானியும், ஆயுர்வேதமண்டல ஸம்மேளனத்திற்கு பெரிய போஷகராயுமிருந்த தேசபூஷணம் என்ற அந்வர்த்தமான பிருதுபூண்ட ஸ்ரீரங்கவாஸியான ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேசராயர் அவர்களுடைய வைகுண்ட பிராப்தியைக்குறித்து ஆயுர்வேத மஹாமண்டலம் மிகுந்த சோகத்தை அனுபவிக்கிறது.

2. 1945 நவம்பரில் மண்டலத்தின் 13-வது ஸம்மேளனத்தில் நடந்த தீர்மானப்படிக்கு மண்டலத்தலைவர் ஸ்ரீ V. B. நடராஜ

சாஸ்திரியால் மதுரை வைத்திய சந்திரிகா சொந்தக்காரர் ஸ்ரீ பண்டித S. நாராயணய்யங்காரிடம் ஏற்கனவே கடிதம்மூலம் வைத்தியசந்திரிகையை மண்டலத்திற்குக் கொடுத்து உதவும்படிக்கு செய்யப்பட்டுள்ள பிரார்த்தனைக்கு இணங்கி ஸ்ரீ S. நாராயண அய்யங்கார் ஸ்வாமி தமது வைத்தியசந்திரிகையை மண்டலத்திற்கு பூரண ஸ்வாதந்திரியத்துடன் ஸ்திரமாக ஸமர்ப்பணம் செய்துள்ளதை மண்டலம் ஸ்ரீ அய்யங்காரவர்களுக்கு ஹிருதய புரஸ்ஸரமான கிருதக்ஞதையுடன் வைத்திய சந்திரிகையை வரவேற்று ஸ்வீகரித்துக்கொள்ளுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. நேரில் இன்று ஸபைக்கு விஜயம்செய்துள்ள ஸ்ரீ நாராயணய்யங்கார் அவர்களுக்கு ஸபைத்தலைவராலும் மற்றவராலும் தன்யவாதங்கள் சொல்லப்பட்டன.

3. வைத்தியசந்திரிகையின் நிர்வாஹத்திற்குத்தனி உபஸமிதியொன்று நிறுவப்பட்டது. ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரி; திருச்சி, S. நாராயண அய்யங்கார் மதுரை, P. S. ராமசர்மா கரூர் S. M. ஸௌந்தரராஜ அய்யங்கார் ஸ்ரீரங்கம், V. ஸுப்பிரமணிய அய்யர் ஸ்ரீரங்கம் ஆகிய ஐவர்கள் இந்த ஸமிதியின் அங்கத்தினர்கள். ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரி இந்த உபஸமிதிக்குத் தலைவராகவும், வைத்தியசந்திரிகைக்குப் பிரதான ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். இந்த வைத்தியசந்திரிகா நிர்வாஹ ஸமிதியானது பத்திரிகையின் அபிவிருத்தியை உத்தேசித்து ஸாத்தியமான வரையில் ஸ்திரமாய் அடிக்கடி அங்கத்தினர்களை மாற்றாமலுமிருந்தால் நலமென்றும் ஏகமனதாய் சிபார்சு செய்யப்பட்டது.

குறிப்பு:—வைத்திய சந்திரிகையை அச்சிட்டு வெளியிட மதுரையைப்பார்க்கிலும் திருச்சிராப்பள்ளி அதிக ஸௌகரியம் பொருந்தியது என்று பத்திரிகைக் காரியாலயத்தை திருச்சியில் ஸ்திரமாய் வைத்துக்கொள்ளுவதாக ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. இதற்கு அவசியமான அரசாங்க அநுமதி அடையும் வரையில் மதுரையிலிருந்தே சந்திரிகை வெளியாகும்.

வைத்திய சந்திரிகையை நடத்த உடனே அவசியமான பணத்தை தானம்செய்யத்தலைவரால் பிரார்த்தனை செய்யப்பட்ட உடன் கீழ்கண்ட 5 கனவான்கள் மண்டலத்திற்கு ஆஜீவஸதஸ்யர்களாக (Life members)ச் சேர்ந்து கையில் தொகையும் கொடுத்தருளினர்.

மதுரை	ப. ஸ்ரீ S. நாராயண அய்யங்கார்	ரூ.	100—0—0
கரூர்	ப. ஸ்ரீ P. S. ராமசர்மா	ரூ.	100—0—0
திருச்சி	ப. ஸ்ரீ V. R. ஸுப்பிரம்மணிய அய்யர்	ரூ.	100—0—0
,,	ப. ஸ்ரீ A. ராகவராவ்	ரூ.	100—0—0
,,	ப. ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரி	ரூ.	100—0—0

மண்டலத்திற்குள்ள சந்தாவுடன் வைத்திய சந்திரிகைக்காகத் தனியாகத் தொகை ரூபத்து கொடுப்பதாக ஸ்ரீ T. P. நாராயண அய்யர் அவர்கள் முதலிய பத்து கனவான் கள் வாக்களித்துள்ளனர்.

வைத்திய ஸஹோதரர்களிடம் முக்கியமான வேண்டுகோள்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு சொந்தப்பத்திரிகையில்லை என்ற குறை இப்போது நீங்கிவிட்டது என்று பெரிய ஸந்தோஷ விஷயம். இக்காலத்தில் ஒரு ஸங்கத்திற்குத் தனிப்பத்திரிகை இல்லாவிடில் அந்த ஸங்கம் ஊமையாக இருக்கும் மனிதனுக்குச் சமமாகும். விசேஷித்து வைத்திய ஸங்கத்திற்கு சாஸ்திரீயமான ஆராய்ச்சிகளையும், சிகித்ஸாநுபவங்களையும் எல்லோருக்கும் தெரிவிக்க பத்திரிகை இன்றி வேறு என்ன ஸாதனம்? யுத்தம் முடிந்தும் அதன் விளைவான கஷ்டதசைகள் இன்னம் முடியவில்லை. புதிய பத்திரிகை ஒன்று ஆரம்பித்தால் இப்போது அஸாத்தியம் என்பதை உணர்ந்து ஸ்ரீ நாராயணய்யங்கார் 'அவர்கள் தனது வைத்திய சந்திரிகையை மண்டலத்திற்கு' தானம் செய்துள்ளார். இனி இந்தப்பத்திரிகையை மேன்மேலும் அபிவிருத்தி செய்வது வைத்தியர்கள் ஒவ்வொருவருடையவும் பொறுப்பு.

அபிவிருத்திக்கு முதலில் பணம் முக்கியமானது மஹாமண்டலத்தின் அங்கத்தினருக்கு வைத்திய சந்திரிகா இனாமாகவே கொடுப்பதாக மண்டலம் தீர்மானித்திருக்கிறது. மண்டலத்திற்கு வருஷ சந்தா ரூ. 3—0—0. இந்த சந்தாத்தொகையை வார்ஷிக ஸம்மேளன ஸந்தர்ப்பத்தில் வரும் பிரதிநிதிகளிடமிருந்து வசூலிப்பது வழக்கமாயிருந்தது. சந்திரிகையைப் பிரதிமாதம் வெளியிட அவசியமிருப்பதால் மண்டல சந்தாவை வைத்திய ஸோதரர்கள் எல்லோரும் உடனே மணியார்டர் மூலம் மண்டலப் பொதுக்காரியதரிசிக்கு அனுப்பிவிட வேண்டப்படுகிறார்கள்.

ஏற்கனவே வைத்திய சந்திரிகையின் சந்தா ரூ. 2—0—0 தானிருந்தது இப்போது ரூ. 3—0—0 ஆக ஆக்கியிருக்கிறபடியால் ரூ. 2—0—0 வீதம் 1946-வது வருஷத்திற்கு சந்தா செலுத்தியுள்ளவர்கள் தயைசெய்து பாக்கி ரூபாய் 1—0—0 ஐயும் அனுப்பக்கோரப்படுகிறது. தற்சமயம் ஆரம்பகாலத்தில் சந்தாதார்களுடைய சந்தாத்தொகையை மட்டிலும் கொண்டு தகுந்த முறையில் பத்திரிகை நடத்துவது இயலாது என்பது எவருமறிந்ததே. ஆகலால் சந்தாத்தொகையுடன் கூட மனஸ்வீ மஹான்களான வைத்தியர்கள் விசேஷ தன உதவிசெய்யப் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

மேலும் தாங்கள் மண்டல மெம்பராவதுடன் மட்டும் இல்லாமல் தெரிந்த ஒவ்வொரு வைத்தியரையும் மெம்பராகச் சேர்க்கும்படியும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஆங்காங்கு இருக்கும் வைத்தியர்கள் பலர்களுடைய விலாசமே தெரியவில்லை. ஆதலால் வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த வைத்தியர்களை மண்டலத்திற்கு தங்கள் விலாஸத்தை எழுதச்சொல்ல வேண்டும். வைத்தியர்களில் சிலர் மருந்து வியாபாரம் செய்பவர்களுமிருக்கின்றனர். இவர்கள் சந்திரிகையில் விளம்பரம் செய்து உபகாரம் செய்வது மூலம் தாங்களும் உபகாரமடைய வேண்டப்படுகிறார்கள். வியாபாரமில்லாத வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த மருந்து வியாபாரிகளை சந்திரிகையில் விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்தல் மிகவும் உபகாரம்.

சந்திரிகையில் அடுத்த மாதம் முதல் பொதுஜன ஆரோக்கியம் ஸுகாதாரம்போன்ற ஸ்வஸ்த விருத்த ஸம்பந்தமான விஷயங்கள் ஸ்திரமாய் ஒரு பகுதியில் வந்துகொண்டேயிருக்கும். இந்த அம்சம் வைத்தியரல்லாத பொது மக்கட்கு விசேஷப்பயனை அளிக்கும். ஆதலால் வைத்தியரல்லாத ஜனங்களையும் சந்தாதாரராகச்சேர்க்க ஒவ்வொரு வைத்தியரும் சிறிது மனஸ்வைத்தால் வைத்திய சந்திரிகா பூர்ண சந்திரிகாப் பிரகாசத்துடன் சோபிக்கும் என்பதில் ஸந்தேகமே இல்லை.

தற்சமயம் முக்கியமாகக் கடையில் தெரிவித்துக்கொள்ளுவது இந்த பிப்ரவரிமாத சஞ்சிகையைக் கண்ணுறும் அன்பர்கள் எல்லோரும் உடனே தயைசெய்து தங்கள் மனம்போல் தொகை அனுப்பவேண்டும். கடைசி பக்ஷம் சந்தாத்தொகை ரூ. 3—0—0 அனுப்பவேண்டும். மார்ச்சு 31ௗக்குள் தொகை மணியார்டர் செய்ய அவகாசமில்லாதவர்களுக்கு அடுத்தமாதம் சஞ்சிகையை வி. பி. மூலம் அனுப்பும்படிக்கு வாசகர்கள் விரும்புகிறார்கள் என்று நிச்சயிக்கப்பட்டு ஏப்பிரலில் சஞ்சிகை வி. பி. மூலம் அனுப்பப்படும்.

குறிப்பு:—தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் (ஸம்மேளனம் எப்போது நடந்தாலும்) சந்தாவிற்கும் வரவுசெலவுக்கும் வருஷாரம்பம் இங்கிலீஷ் ஜனவரி—டிசம்பர் (calendar year) ஆகும். வருஷமத்தியில் மெம்பராகச்சேருவோர்கட்கும் ஜனவரி முதலே கணக்குவைத்து ஆரம்பம் முதலே வைத்தியசந்திரிகையும் கைவசமிருக்கும்வரை அனுப்பப்படும்,

சந்தாத்தொகை விளம்பர விஷயங்கள் முதலிய அனுப்பவேண்டிய விலாஸம்—General Secretary, Tamil Nad Ayurveda Mahamandal, Sakthi Vilas Vaidya Sala, Karur Trichy District. சந்திரிகையில் வெளியிடவேண்டிய விஷயங்கள் நிபந்தங்கள் முதலிய அனுப்பவேண்டிய விலாஸம்:—

Editor, Vaidya Chandrika, Atreya Ayurvedic Works, Tennore Road, Trichinopoly.

V. B, நடராஜ சாஸ்திரி,
தமிழ்நாடு ஆ. ம. தலைவர், திருச்சி.

லோஹங்களும் அதன் உபயோகங்களும்.

வைத்ய விசாரத S. V. ராதாகிருஷ்ணா சாஸ்திரிகள்
தஞ்சாவூர்.

4. பிருஹத்யோகதரங்கிணீ:—தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், ஈயம், இரும்பு, உளி என 7 தாதுக்கள் எனவும் சிலர் பாதரஸத்தை 8-வது தாதுவாகக் கூறுவதாயும் காணப்படுகின்றது.

5. ரஸஸங்கேத கலிகை—தங்கம், வெள்ளி, செம்பு, காரீயம், ஈயம், இரும்பு, இவ்வாறும் சுத்தலோஹமெனவும் வர்த்தகம் வெண்கலம் முதலிய பல கலப்படங்களும் கூறப்படுகின்றன.

6. பாவப்பிரகாசிகை:—முன்சொன்ன லோஹங்கள் ஆறுடன் காந்தாகத்தையும் சேர்த்து கூறுகிறார். கலப்படங்களைப்பற்றி கூறவில்லை.

7. சாரங்கதர ஸம்ஹிதை:—பிருஹத்யோக தரங்கிணியின் மதப்படி 7 தாதுக்கள் கூறப்படுகின்றன. ஆனால் பாதரஸம் காணப்படவில்லை.

8. யோகரத்னாகரம்:—பாவப்பிரகாசிகையின்படி 6 லோஹமும் பித்தளை, வெங்கலம் என்ற 2 லோஹங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

9. ரஸப்ரகாச ஸுதாகரம்:—லோஹங்களை சுத்தம், பூதி, மிச்ரம் என 3 விதமாக பிரித்துக்கொண்டு தங்கம், வெள்ளி, தாம்ரம், அயம், இவை சுத்தமெனவும் வங்கம் நாகம் இவை பூதி எனவும், பித்தளை, வெண்கலம் வர்த்தகம் இம்மூன்றும் மிச்ரம் எனவும் கூறப்படுகின்றது.

10. ரஸரத்ன ஸமுச்சயம்:—ரஸபிரகாச ஸுதாகரத்தையே அனுஸரிக்கிறது.

11. லோஹ ஸர்வஸ்வத்தில்:—8 விதம் லோஹம் எனவும் அவைகளில் ஸித்தர்களின் மதப்படி தான்—உளி அப்ரகம், தங்கம் தாம்ரம் என்ற 4 லோஹங்களையும் கூறுவதாகச் சொல்லப்படுகிறது.

12. பிந்துவின் ரஸபத்ததியில் லோஹங்கள் சுத்தலோஹம் உபலோஹம் என 2 விதம் என்றும் தங்கம், வெள்ளி, அயஸ், தாம்ரம், காரீயம், ஈயம் என இவ்வாறும் சுத்த லோஹம் எனவும் வெண்கலம், பித்தளை, கோஷம் என இம்மூன்றும் உபலோஹம் என கூறப்படுகின்றது.

13. தன்வந்தரி நிகண்டுவில் தனித்தனித்து லோஹங்கள்—பசுதத்தைத்தவிர—கூறப்படுகின்றன. மிச்ரகவர்கத்தில் 7 தாதுக்கள் என தங்கம், வெள்ளி, தாம்ரம் ஈயம் நாக்தநாகம், காரீயம், லோஹம் எனவும் உப தாதுக்களில் லோஹ குணமற்ற மாக்ஷிகம், ஸிந்தூரம் முதலியவைகளுடன் பித்தளையும் வெண்கலமும் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பிறகு தாதுக்களுக்கும் நவக்ரஹங்களுக்கும் ஸம்பந்தம் கூறுமிடத்து 7 தாதுக்களில் நாக்தநாகத்தை நீக்கியும் வெண்கலம் பித்தளை சேர்த்தும் கூறுகிறது. ஆக இக்கிரந்தத்தில் ஓர் வியவஸ்தையற்று லோஹகணனம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆக மேற்கூறிய 13 கிரந்தங்களைப் பார்க்கும்பொழுது அவைகளின் அபிப்பிராயம் வேறுபட்டே காணப்படுகின்றது. ஆனால் தான் சொல்லும் லோஹத்திற்கு லக்ஷணமோ, தன் அபிப்பிராயம் தான் சரியானதென்பதற்கு காரணமோ அவைகளில் காணப்படவில்லை. தங்கம் லோஹம்தான் என பின்வருபவர் அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கும்பொழுது சரகர்மட்டும் தங்கத்தை ஏன் லோஹங்களிலிருந்து விலக்கவேண்டும். லோஹத்தன்மை அதற்கு இல்லை, என்பதல்லவா காரணமாயிருக்க வேண்டும். அந்த லோஹத்தன்மையாது? பின் வருபவர்கள் தங்கத்தை லோஹமாகச் சேர்ப்பதற்குகாரணம் என்ன? என்பதும் அவர்களின் கிரந்தங்களில் குறிப்பிடக்காணோம்.

சரகருக்கு ஔஷதி சிகித்ஸையில் தான் அனுபவம் அதிகம் என்றோ, தங்கம் அக்காலம் லோஹம் எனக்கண்டுபிடிக்கப்படவில்லை எனவோ கூறமுடியாது. ஆனால் அவர் எழுதும் முறையிலிருந்தும் உரையாசிரியரின் வாக்கிலிருந்தும் லோஹத்தினின்றும்

தங்கம் மலமில்லாமையால்தான் பிரிக்கப்படுகின்றது என்று நன்கு புலப்படுகின்றது.

லோஹ மலம் என்பது என்ன?

நமது பிராசீனர்கள் தங்கம் முதலிய லோஹங்களை பூமியிலிருந்து அகப்படும் தேஜஸ் என்ற பூதத்தாலாக்கப்பட்ட திரவ்யங்கள் எனக் கூறுகிறார்கள். எல்லா திரவ்யங்களும் ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்டது என்பது ஓர் உண்மையாயிருந்தபோதிலும் இந்த லோஹங்களில் பூதங்களின் கலப்பில் மற்ற பூதங்களின் அம்சம் குறைந்து தேஜஸ் பூதத்தின் கலப்பு அதிகம் எனவும் கூறலாம். அதிலும் தங்கத்தில் தேஜஸ் பூதத்தின் அம்சம் பூர்ணமாக இருக்கிறது. பஞ்சபூதமான திரவ்யத்திலிருந்து மற்ற பூதச்சேர்க்கையை நீக்க ஓர் உபாயமுண்டு. அதாவது அனலில் காய்ச்ச ஆப்யமான அம்சம் ஆவியாகவும் பார்த்திவமான அம்சம் சாம்பலாகவும் (oxidised) ஆகிவிடும். ஆனால் தங்கத்தை அதி தீவ்ரமான அக்னியில் காய்ச்சும்பொழுதும் அதனிடை நிறம் குன்றாதிருக்கும் என்பது யாவருமறிந்த விஷயம். ஆனால் மற்ற எல்லா லோஹங்களும் தனதிடையில் குறைந்துகாணப்படுகின்றன. ஆக இந்த எடைக்குறைவின் அளவை யாக்ஞவல்க்யஸ்மிருதியில் கம்மாளர்களின் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடிக்க உதவியாக கீழ்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. "தங்கம் எவ்வளவு உருக்கினாலும் எடை குறைவதில்லை. வெள்ளி 100ல் 2 பங்கும் ஈயம் 100ல் 8 பங்கும் தாம்ரமும் அயஸ்ஸும் 100ல் 15 பங்கும் குறைகின்றன."

ஆக மேற்கூறியவிதம் தங்கத்தில் கிட்டம் கிடையாது என்பதால், மலங்களுடன் கூடியவையே லோஹமெனக் கருதும் சரகர் மலமல்லாத்தங்கத்தை அவைகளிலிருந்து பிரித்தது ஆச்சரியமில்லை. ஆனால் தங்கத்தில் ஆகினால் தாம்ரம் முதலியவை கலக்கப்பட்டால் தங்கம் உருக்கினால் சிறிது இடை குன்றும். ஆகையால் அவ்விதமான கலப்படமான தங்கத்தையும் சேர்க்கக்கூடாதென்பதையே லோஹகுணமற்ற தங்கத்தையே ஔஷதத்தில் சேர்க்கவேண்டுமென்பதை சக்ரபாணி மீண்டும் ஞாபகப்படுத்துகிறார்.

பின் வருபவர்களோ—மேற்கூறிய லோஹத்தின் லக்ஷணத்தை புறக்கணித்துவிட்டு, உருகும்தன்மை, கனமாக இருப்பது முதலிய முன் கூறிய ஸாமான்ய லக்ஷணத்தை கையாண்டு தங்கத்தை லோஹத்துடன் சேர்த்தனர் என்றே கூறவேண்டும். துத்தநாகத்தின் லோஹத்தன்மை மிகவும் ஸமீபகாலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவேண்டும். அதற்குமுன் அதைஒருஉபதாதுக்ருதியாக(கர்ப்பரஸத்வம்) கூறிவிட்டார்கள். இதைப்பற்றி பிறகு விவரிப்போம். ரஸத்தை லோஹமாகக்கூறுவர் ஒருவர்தாம். அவரும், அதிலிருக்கும் பளபளப்பு, பாரம் நெருக்கம் முதலியவை கொண்டு பிரமித்திருக்கவேண்டும். ஆனால் அப்ரகத்தை எவ்விதம்லோஹத்தில்சேர்ப்பது? மேற்கூறிய லக்ஷணங்கள் இதிலும் பொருந்தியிருக்கின்றன என்பதால்தானிருக்கவேண்டும். ஆனால் லோஹ என்ற சப்தத்தில் முக்யப்பொருளான கம்பியாக இழுக்கப்படும் தன்மையோ ஆதாரமாக இருக்கும் தன்மையோ அல்லது லூஹ என்ற தாதுவின் பொருளான வெட்டுவதற்குரியதாக இருக்கும் தன்மையோ இந்த ௨லும் காணாததால் மற்றவர்கள் இவைகளை லோஹவர்க்கத்தில் சேர்க்கவில்லை. ஆக தங்கம், வெள்ளி, தாம்ரம், ஈயம், காரீயம், அயஸ், துத்தநாகம் இந்த ஏழும் சுத்தலோஹம் எனவும் பித்தளை, வெண்கலம், வர்த்தம் என. இம்மூன்றும் மிச்ரலோஹம் எனவும் கருதப்படுகின்றது. இவைகளில் சுத்த லோஹங்களைப்பற்றி முதலில் ஆராய்வோம்.

நமது பிராசீன ஆசிரியர்கள் ஒவ்வொரு லோஹங்களையும் சரீரத்தில் சேர்ப்பதற்குகந்ததாகச் செய்யுமுன் கீழ்கண்டவைகளை அவசியம் பரீக்ஷிக்கும்படி கூறுகிறார்கள். ஒவ்வொன்றின் உட்பிரிவு உத்பத்திஸ்தலம் உத்தம அதம மத்யம விபாகங்கள் ரஸம், வீர்யம், விபாகம், பிரபாவம், ஜாதி, மற்ற லோஹங்களுடன் சேர்க்கை. அதைத்தவிர்க்க உபாயம், லோஹத்தின் ஸ்வபாவ தோஷங்கள் அதைத்தவிர்க்க உபாயம், சரீரத்தில் சேர்க்கைக்குகந்ததாயும் சீக்ரம் வியாபிக்கும் தன்மையுடையதாயும் செய்யுதல். அதிக வீர்யமாயுள்ளதாகச்செய்யுதல் என மேற்கூறியவிதம் உத்பத்திஸ்தலம் அன்யலோஹ சேர்க்கை முதலியவைகளை முக்யமாய்

கவனிப்பது என்பது—ஔஷதங்கள் செய்யத்தக்க லோஹம் இது தகாதது இது என்பதை அறிவதன்பொருட்டு மருந்து தயாரித்த பிறகு இந்த மருந்தின் ஆதாரமான லோஹம் ஜாதியிலும் குணத்திலும் கீழ்ப்பட்டதென ஒருவன் அறிந்தானேயாகில் அம்மருந்திலுள்ள கெடுதல்களை எவ்விதத்திலும் நிவர்த்திசெய்ய முடியாது போவதுடன் ஔஷதம் செய்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் பணச்சிலவும்வீணே. ரோகிகளுக்கு கொடுக்க வியாதியை உண்டாக்கும்.

லோஹக்கலப்பு-அதன் பரீக்ஷை—எந்த லோஹத்திலும் ஔஷதமாகச் செய்யப்படும்பொழுது மற்ற லோஹங்களின் கலப்பு ஏற்படாதவாறு கவனிக்கவேண்டும். இதை கவனிக்க சாஸ்திரங்களில் கீழ்கண்ட முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. (1) காய்ச்சிப்பார்த்தல் (2) வெட்டிப்பார்த்தல் (3) உரைத்துப்பார்த்தல் (4) சம்மட்டிகொண்டடிப்பது (5) நிறுப்பது இப்பரீக்ஷைகளில் காய்ச்சுதல் முதலியதில் உண்டாகும் வர்ண வேறுபாடுகளினாலும் நிறையில் ஏற்படும் தாரதம்யத்தாலும் லோஹக்கலப்பை கண்டுபிடித்துவிடலாம். லோஹக்கலப்புற்றிருந்தால் அந்த லோஹத்தை சேர்க்காமலிருப்பதே நல்லது.

சுத்திகள் லோஹ விலக்குசுத்தி.

மேற்கூறிய விதம் லோஹக்கலப்பற்ற லோஹங்கள் சுத்தமாக கிடைக்காவிடில் கிடைத்தவைகளிலிருந்து லோஹத்தை சுத்தமாக பிரிப்பது என்பது முக்யமாகின்றது. இதற்கு கந்த சிற்சில சுத்திகளால் கலப்படமான தங்கம் முதலியவைகளிலிருந்து இயற்கையான தங்கம் வெள்ளி போன்ற சுத்த தங்கம் முதலியவை கிடைக்கும். ஆனால் சிறிது எடை குன்றும். குன்றின எடையிலிருந்து சேர்க்கப்பட்ட லோஹத்தின் இடையைக் கண்டுபிடித்து விடலாம்

தோஷவிலக்கு சுத்தி.

ஔஷதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் லோஹங்களில், அமிருதத்திற்குப்போல் அனேக உத்தம குணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் விஷத்தைவிட கொடிய சில தோஷங்களும் இருக்

இன்றன. மலமில்லாத தங்கத்தைத்தவிர மற்ற எல்லா லோஹங்களும் அன்யலோஹச்சேர்க்கையறச்செய்தும், சரீரத்தில் சேர்க்கத் தகுந்தவைகளாக ஆகிறதில்லை.

ப்ராணா: ப்ராணப்ருதாமன்னம், ததயுக்த்யா நிஹந்த்யஸூந், விஷம் ப்ராணஹரம், தச்ச யுக்தி யுக்தம் ரஸாயனம் என்ற சரகவசனப்படி "அன்னமும் கொல்லும் அறிவிலாதுண்ணில், விஷமதுவாயினும் விரைந்துயிர்காக்கும்" என அன்னத்திலும் தோஷமிருக்கிறது, விஷத்திலும் குணமிருக்கிறதென்றால் மற்றெந்தப் பொருளில் குணதோஷங்கள் இல்லையெனலாம். இதுபோல் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிக்கும்பொழுது ஒளஷதத்திற்கு உத்தமம் என கலப்படமில்லாமல் எடுத்த லோஹத்திலும் குணதோஷங்கள் இருந்துதானே தீரும். ஆதலால் குணங்கள் வியாதிகளைத்தீர்க்குமானால் தோஷங்கள் வியாதிகளை உத்பத்திசெய்யும். மூலிகை ஒளஷதிகளில் இருக்கும் தோஷங்களைக்காட்டிலும் லோஹத்திலிருக்கும் தோஷங்கள் மிகக்கொடியன. ஆனால் சீர்தூக்கினால் தோஷங்களில் அதிருப்தி உண்டானபொழுதும், அதிலிருக்கும் குணங்களைப் பார்க்கும்பொழுது அவைகளைவிட மனம் வரவில்லை.

அற்ப அளவில் உபயோகிக்கத்தகுந்தது எனவும் அதிக பலனை அளிப்பதையும் அருசி முதலிய கொடுக்காதது எனவுமல்லவா இவைகளில் அதிக ஆதரவுகொண்டோம். கொடிய விஷத்தையும் ஒளஷதமாக்கிவிடலாம் அதை உபயோகிக்கும் திறனால் "ஒளஷதமாகாத—ஆக்கூடாத—ஆக்கமுடியாத பொருள் உலகத்திலில்லை எல்லாம் ஒளஷதமே" என சரகர் முதலியவர்கள் கூறுகிறார்கள். லோஹச்சேர்க்கையைத் தவிர்ப்பது போன்றதல்ல தோஷவிலக்கு ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளை விலக்கலாமே தவிர அதன் ஸ்வாவகுணத்தை பிரிப்பதோ விலக்குவதோ இயலாத காரியம் குணதோஷங்கள் பொருளின் ஸ்வபாவமானதாலும் இந்திரியங்களுக்கு புலப்படாதாகையாலும் எப்பொழுதும் தனது ஆசிரயமான பொருளை விட்டு பிரியாது ஆசிரயம் நசித்தால் தானும் நசிக்கும் என்பதனாலும் இந்த தோஷ குணங்களை லோஹங்களிலிருந்து எவ்விதம் பிரிப்பது?

ஆம் தோஷங்களைப்பிரிக்கமுடியாது என்பது உண்மைதான் ஆனால் அப்பொருளிலுள்ள தோஷங்களை நசிக்கச்செய்வது—தோஷங்களின் சக்தியைக்குறைப்பது—உத்தம குணத்தை அதிகமாகப் புகட்டுவது என்பது ஓர் உயர்ந்த உபாயமாகும். இவ்வுபாயங்களால் தோஷங்களை மட்டும் வென்று அடக்கி நமதிஷ்டப்படி ஔஷதமாகக்கொள்ளலாம் என்பதற்கையமில்லை. அப்படி தோஷங்களைக்குறைக்கத்தகுந்த சுத்திமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதுதான் தோஷவிலக்கு.

சுத்தி:—இந்த தோஷ விலக்கு சுத்தியும் பொது சுத்தி—விசேஷசுத்தி என இருவகைப்படுகிறது. பொது சுத்தியில் உலோஹங்களை சுத்திசெய்வதற்கு திரவப்பொருள் இன்னவை என்பதையும் அவைகளில் தோய்க்கும் தடவைகளையும் விவரிப்போம்.

திரவங்கள்:—(1) நல்லெண்ணெ கலப்பில்லாமலிருக்கவேண்டும் (2) மோர்—நான்குபங்கு ஜலம்விட்டு கடைந்த பசுவின்மோர் (3) கோமூத்ரம்—வியாதியில்லாத பசுவினுடையது (4) காடி (5) கொள்ளுகஷாயம் இந்த ஐந்து திரவப்பொருள்களிலும் ஒவ்வொன்றிலும் 7 தடவை வீதம் உலோஹத்தகடுகளைக் காய்ச்சித்தோய்க்க வேண்டும். திரவங்கள் காய்ச்சித்தோய்ப்பதற்கு போதுமானதாக இருப்பதும் ஒவ்வொருதடவையும் புதிதாக எடுத்துக்கொள்வதும் மேல். இப்படி தோய்க்கப்படும்பொழுது முன்னிருந்த நிலைமையை விட லோஹம் கெட்டிப்படுவதோடு தோஷமற்றதாயுமாகின்றது. பழுக்கக்காய்ச்சி உடனே சுருக்கு கொடுப்பதால் உடனே குளுமையடைவதால் அதிலிருக்கும் பிளந்துபோகும் தன்மை நீங்கி கெட்டியாகின்றது. சுருக்கு கொடுக்கும் திரவத்தின் அம்சமும் லோஹத்தில் சேருகின்றது. காய்ச்சப்பட்டு மெதுவாக ஆறினால் லோஹம் விரிய ஹேதுவாகும்.

சில கிரந்தங்களில் சுருக்குகொடுக்கும் தடவைகள்—மூன்று—ஐந்து—ஏழு என்று அனேக வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் தோஷம் விலகுவதற்கு அறிகுறிகள் ஒன்றும் கூறப்பட

வில்லை. அதனால் குறைந்த தடவைகளில் செய்வது போதுமா என ஸந்தேகம் வருகின்றது.

சரகத்தில் லோஹ ரஸாயனம் கூறுமிடத்தில் "திரிபலா கஷாயத்திலும், கோமூத்திரத்திலும், ஜ்யோதிஷ்மதீ கஷாயத்திலும், இங்குதீக்ஷாரஜலத்திலும் புரசக்ஷாரஜலத்திலும், நெருப்புவர்ணமாகப் பழுக்கக்காய்ச்சின உளியின் தகடுகளை தோய்க்க மைபோல் கறுத்தவுடன் தகடுகளை சூர்ணம் செய்யவும்". எனக்கூறியிருப்பதைப் பார்க்குங்கால் சுருக்கு கொடுப்பதனால் ஏற்படும் லோஹத்தின் மாறுதலைப்பார்த்தபிறகே சுருக்குகொடுப்பதைநிறுத்தவேண்டுமெனத்தோன்றுகிறது. அதனால் சுருக்குகொடுப்பதின் எண்ணிக்கை முக்யமல்ல. தோஷம் விலகும் அறிகுறி தெரிந்த பிறகுதான் நிறுத்தவேண்டும். ஆனால் எல்லாவித லோஹங்களுக்கும் மேற்கூறிய ஸித்தம் கிரந்தங்களில் மாறுதல்கள் கூறப்படவில்லை. அனேகமாய் 7 தடவைகளுக்குமேல்-எந்த கிரந்தங்களிலும் சுருக்கு செய்யக் கூறப்படவில்லை. ஒவ்வொரு லோஹங்களிலும் ஏற்படும் மாறுதல்கள் கூறப்படாததால்—ஏழுதடவை சுருக்குகொடுப்பது பூர்ணசுத்தி எனத்தைரியமாகக்கூறலாம். ஆனால் ஒவ்வொரு தடவைக்கும் ஒவ்வொரு துவைப்பிற்கும் என்ன நிறம் குறிகள் என்பதை அவசியம் கவனிக்கவேண்டுமென்பதை சரகவாக்யம் ஞாபகப்படுத்துகின்றது.

தொடரும்

ஸர்வ வியாபகமான த்வக்ரோகம்.

சென்ற சுமார் மூன்று ஆண்டுகளாக மிகவும் அதிகமாய் நமது தேசத்தில் இங்கெங்கெனாதபடி எங்கும் வியாபித்து வாட்டுகிற சொறிசிரங்கு இன்னமும் குறைந்தபாடில்லை. இதற்கு சரியான சிகிச்சையே கிடையாது. நாம் வைத்தியரிடம் சென்று என்ன பயன். அனுபவிக்கவேண்டியதுதான் என்று பலர் சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள், ஆங்கில வைத்தியமுறையில் சில புதிய மருந்துகள் வெகுவாக விளம்பரம் பிரமாதமாக செய்யப்படும் அவைகளுடைய உபயோகத்தாலும் விசேஷ லாபம் கிடைக்கவில்லை, 'ஸம்க்ஷேபத: க்ரியாயோகோ நிதான பரிவர்ஜனம்' என்ற சொல்படி இந்த வியாதிக்கு எது நிதானமோ அதைத்தவிர்க்காத

வரை இந்த தோல்நோய் சமனமாகாது என்றுதான் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது, முக்கியமான காரண மிந்த வியாதிக்கு நிஸ்ஸாரமானதும், துஷ்டமானதுமான உணவை உட்கொள்ளும்படியான துர்பிக்ஷம் எங்கும் இருப்பதுதான். இதற்குப்பரிகாரம் வைத்தியர்களாகிய நம்மால் தேடமுடியாவிடினும் இந்த நோய் உணவு தோஷத்தினால் ஏற்பட்டது என்பதை நோயாளிகளிடம் தெளிவுறச்சொல்லி நல்ல உணவை அடையும் வழியைத்தேடிக் கொள்ளச் சொல்லவேண்டும். ஸ்தலஸ்தாபன நிர்வாஹ அதிகாரிகளிடமும் தற்சமயம் அளிக்கப்படும் உணவினால் இந்த தீர்க்கானுபந்தியான த்வக்ரோகமும், மற்ற அஜீர்ணம் முதலிய வயிற்றுக் கோளாறுகளும் ஜனங்களை வாட்டுகின்றன என்ற உண்மையை எடுத்து உரைக்கும் பொறுப்பும் நமது வைத்தியர்களைச்சேர்ந்ததே இது நிதான பரிவர்ஜனத்திற்காகச் செய்யவேண்டியது.

சிகித்ஸையில் நமது ஆயுர்வேத வைத்தியமுறைப்படி எந்த சிகித்ஸாக்கிரமம் இந்த சொறிசிரங்கில் மிகவும் உபகாரமாகப் பிரத்யக்ஷத்தில் அனுபவிக்கப் பட்டதோ, அந்த மருந்து முறைகளை தயைசெய்து ஒவ்வொரு வைத்தியரும் வைத்திய சந்திரிகையில் வெளியிட பத்திரிகாசிரியருக்கு உடனே எழுதியனுப்ப வேண்டப்படுகிறது. இதில் கைகண்டதாகத் தெரிவிக்கப்படும் எல்லா யோகங்களும் சந்திரிகையில் அடுத்த இதழில் வெளியிடப் படும்.

பத்திரிகாசிரியர்.

V. B. **நடராஜ சாஸ்திரி**, திருச்சிராப்பள்ளி.

விரண சிகித்ஸையில் ஸ்வேதக்கிரியா.

ஸ்வேதத்தை ஸர்வாங்கஸ்வேதமென்றும், பிரத்யங்க ஸ்வேதமென்றும் இரண்டு வகையாக ஸ்வேதம் கொடுக்கவேண்டிய ஸ்தானத்தை அனுசரித்துப் பிரிக்கலாம். ஸர்வாங்கஸ்வேதம் பஞ்சகர்ம சிகித்ஸையில் ஒரு முக்கிய அங்கமாகும். பிரத்யங்கஸ்வேதம் தனியான குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் செய்யப்படுவது; அநேக வாதகபவிகாரங்களில் மிகவும் உபயோகமாயுள்ளது.

ஸ்வேதம் எவ்விதம் விகாரங்களை சமனம் செய்கிறது? ஸ்ரோதோ லீனங்களாக ஆகி கஷ்டத்தை விளைவிக்கின்ற தோஷங்கள் ஸ்வேதோஷ்மாவினால் இளக்கப்படுகின்றன. இளக்கப்படாவிடில் தோஷங்களை கோஷ்டத்திற்கு கொண்டுவரவோ வெளியில் தள்ளவோ முடியாது, ஆதலால் தோஷங்கள் திரவமாக்கப்பட வேண்டும். இதைச்செய்கிறது ஸ்வேதம். தாதுக்களில் லீனமான தோஷங்களை திரவிக்கச்செய்ய முதலில் அவயவங்களுக்கு ஒரு பசை ஆவசியகம். இதற்காகத்தான் முதலில் க்லேதம் உண்டுபண்ண ஸ்வேதத்திற்கு முன்பு ஸ்நேஹம் ரூக்ஷமான இடங்களில் கண்டிப்பாய் வேண்டியிருக்கிறது. இதுவே ஸ்ரீ வாக்படாசார்யாரின் ஸ்வேதக்கிரியாவைப்பற்றிய உபதேசம், பிரத்யங்கஸ்வேதத்திலும் மேற்கூறிய யுக்திப்பிரகாரம் தான் ஸ்நேஹாப்யங்கம் செய்வித்து ரூக்ஷமான பிரதேசங்களில் ஸ்வேதம் செய்தல் அவசியமாக ஆகிறது. கபப்பிரதானமான இடத்தில் ஸ்நேஹம் இல்லாமல் ரூக்ஷஸ்வேதம் செய்யும் உத்தேசம் அங்கு க்லேதனம் தேவையில்லை.

காய சிகித்ஸையில் எவ்விதம் க்லேதத்தை அடைந்த தோஷங்களை யுக்திகளினால் வெளிப்படுத்த ஸ்வேதம் மிகவும் உபகாரமோ அவ்விதமே சல்ய சிகித்ஸையிலும் துஷ்ட விரணங்களுடைய க்லேதங்களை நிர்ஹரணம் செய்ய விரணஸ்தானங்களில் ஸ்வேதம் மிகவும் உபயோகமாகிறது. மிகவும் பூயமதிகமாகி சோதனம் எந்த விரணத்தில் அவசியமாகத் தேவையிருக்கிறதோ அந்த எல்லாவித துஷ்ட விரணங்களிலும் சோதன—ரோபண—வேதன—ஸ்தாபன காரியங்களை ஸ்வேதம் அற்புதமாகச் செய்கிறது என்பது இந்த வியாஸ கர்த்தாவின் வெகுகாலத்திய அனுபவ பிரத்யக்ஷம்,

விரணங்களில் ஸ்வேதம் விரணஸ்தானம், அவஸ்தைகளைக் கவனித்துப்பலவித யுக்திகளினால் வைத்தியர் கல்பித்து உசிதப்படி செய்யவேண்டும். பைத்திகமான விரணங்களில் மிருது ஸ்வேதம் செய்தல் உசிதம், சரீரத்தில் அதிஸ்வேதம் எவ்விதம் தோஷங்களை விளைவிக்குமோ அவ்விதமே விரணங்களிலும் அதிஸ்வேதம் கண்டிப்பாய் கூடாது. அதிஸ்வேதத்தினால் ரக்தகோபம் ஏற்படும்.

வேப்பம்பட்டை அல்லது இலைகளைக்கொண்டு கஷாயம் தயாரித்து, வடிகட்டிவிட்டுத் திரும்பவும் கஷாயத்தை அக்னியில் சூடாகவே வைத்துக்கொண்டு அக்கஷாயத்தில் பருத்திப்பட்டை அல்லது துணியை நனைத்து மற்றொரு துணியின் உதவியால் ஜலமின்றி இறுக்கிப்பிழிந்துவிட்டு சூடான பருத்தியை அப்படியே எடுத்து விரணத்தில் மேல்வைத்து வைத்து ஸஹன சக்தியை அனுஸரித்து ஸ்வேதம் திரும்பத்திரும்பப் போடவேண்டும். இவ்விதம் ஒத்தடம் போட்டுவிட்டு சோதன ரோபண திரவிய ஸித்தமான தைலத்தையோ கிருதத்தையோ சேர்த்து பிசுவை நாடிகதியை அனுஸரித்து விரணத்தில் வைத்து அதன்மேலும் இந்த வெந்த உஷ்ணமான பருத்தியை முதலில் வைத்து மேலே சாதா பந்தை வைத்து பந்தனம் செய்துவிடவேண்டும். நன்றாக சோதனம் ஏற்படும்வரை பிரதிதினமும் செய்யவேண்டும். வெகு சீக்கிரம் சோதனம் ஏற்படும்வரை பிரதிதினமும் செய்யவேண்டும், வெகு சீக்கிரம் சோதனம் ஏற்பட்டு ரோபணமாகிவிடும். விரணஸ்தானங்களில் உஷ்ணமாகவே கஷாய ஸேகமும் செய்வதில் உபகாரமிருக்கிறது. கை—கால்களில் துஷ்ட விரணம் இருந்தால் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் உஷ்ணமான கஷாயத்தை ஊற்றி விரணம் மூழ்கும்படிக்கு கஷாயத்திற்குள்ளேயே விரணமுள்ள இடத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டும். வேறொரு பாத்திரத்தில் தனியாக அக்னியில் கஷாயத்தைக் கொஞ்சம் சூடாகவே வைத்துக்கொண்டிருக்க வேண்டும். விரணத்தை வைத்துக்கொண்டிருக்கும் கஷாயத்திலிருக்கும் சூடு குறையாதபடிக்கும் சூடு வரவர கிரமேண அதிகமாகிறப்போல அந்த பாத்திரத்தில் சூடான கஷாயத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக ஊற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். விரணமுள்ள ஜாகாவில் முதல் வைக்கும்போது கொஞ்சம் சூடு குறைவாக வைத்துப் பிறகு கிரமேண கஷாயத்தைச்சூடாக ஊற்றி சேர்ப்பதால் சூட்டை அதிகமாகச் செய்வதில் லாபமுண்டு. முதலில் பொறுக்காத உஷ்ணத்தைக் கிரமேண ஏற்றுவதால் விரணம் சிறிதும் சிரமமின்றி நன்றாய் பொறுத்துக்கொள்ளும். யந்திர ஸாதன மிருந்தால் நாடீஸ்வேதம் பாஷ்பஸ்வேதங்கள் செய்யலாம். விசேஷ லாபம் விரண விஷயத்

தில் ஏற்படமுடியும் என்று நம்புகிறேன். இந்த ஸ்வேதத்தின் ஒரு பிரகாரபேதமே மேல்நாட்டு வைத்தியமுறையில் எலெக்டிரிஸிடி ஸகாயத்தினுல் செய்யப்படுகிறது. ஆயுர்வேத சாஸ்திரப்படி ஸ்வேதம் செய்வது விசேஷ விஞானப்படியாகும். எப்படியெனில் விரணத்தில் வாதபித்த கபங்களைக்கண்டு அதற்குத் தகுந்தபடிக்கு அந்தந்த தோஷங்களைக் கண்டிக்கக்கூடிய ஒஷதிகளைக்கொண்டு தயாரித்த கஷாயாதிகளினுல் ஸ்வேதம் செய்தால் தோஷங்கள் சீக்கிரம் சாந்தமாகும். எந்த தோஷத்தைச் சேர்ந்த விரணமிது என்று விசேஷ விஞானமின்றி எல்லாவற்றுக்கும் ஒரேவித உஷ்ணத்தைக் கொடுப்பதானது உஷ்ணத்தினுல் ஏற்படக்கூடிய லாபம் மட்டுமே ஏற்படும். தோஷத்தை அறிந்து செய்வதே விசேஷப் பலனை அளிக்க வல்லது. விஞானமுமாகும்.

இந்நாளில் விசேஷமாய் எங்கும் நிறைந்துள்ள சொரிசிறங்குக்கும் பிரத்யங்க ஸ்வேதம் செய்வித்து மேலே லேபனங்கள் போடுவதில் வெகுவாக லாபமிருக்கிறதும் பல இடங்களில் பிரத்யக்ஷமாக கண்டுள்ளேன்.